# YESU EN PAKATHIL

என் இயேசு என் பக்கத்தில்
நேசர் என் பக்கத்தில்
நாளைக்குறித்த கவலையில்லை
எதைக்குறித்த பயமும் இல்லை

என்னோடு இருப்பேன் என்று சொன்ன தேவன் அவர்
என்னை கைவிடாமல் இம்மட்டும் காக்கும் தேவன் அவர்
இம்மானுவேல் என் பக்கத்தில் எபிநேசர் என் பக்கத்தில்
தனிமை என் வாழ்வில் இல்லை
குறைவும் என் வாழ்வில் இல்லை

என்னை அழைத்த தேவன் என்றும் உண்மையுள்ளவர்
வாக்குத்தத்தம் செய்ததை நிறைவேற்றும் தேவன் அவர்

எல்ஷடாய் என் பக்கத்தில்
எல்ரோயீ என் பக்கத்தில்
கண்கள் கலங்குவதில்லை
என் இதயம் கலங்குவதில்லை

இரட்சகர் என் பக்கத்தில்
கன்மலை என் பக்கத்தில்
பரிசுத்தர் என் பக்கத்தில்
பரிகாரி என் பக்கத்தில்
துருகம் என் பக்கத்தில் கேடகம் என் பக்கத்தில்

என் இயேசு என்னோடு என் நேசர் என்னோடு – என்றும்